முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.11.2021, திங்கட்கிழமை

1. சத்திய ஞான சபை கொண்ட
சற்குருவே ஆறுமுக அரங்கனே
இத்தரையில் உன் பெருமை கூறி
இயம்பிடுவேன் பிலவ தேள் திங்கள்
2. திங்களிலே சஷ்டிதிகதி சோமவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 06ம் நாள், 22.11.2021 திங்கட்கிழமை)
தேசிகனுக்கு துல்லிய ஆசிதனை
இங்கனமே இளையான்குடி நாயனாரும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் ஆறுமுக ஞானியரின்
ஞான உபதேசங்கள் தன்னை
பலமாக கலியுகமக்கள் எற்று
பணிந்து ஞானம் பயின்றுவர
4. வருகவே மனபலம் தேகபலம்
வளர்ச்சிக்கான ஞானபலம்
குருவருளாக அரங்கன் பலம்
குறைவிலா மக்களை வந்தடைந்து
5. அடைந்துமே ஞானவான் எனும்
ஆற்றல் பெருக்கம் காணும்
சோடை தடை முடை இல்லா
சுபிட்சமான செயல் ஆக்கமாக
6. ஆகவே உலகோர் சிறந்து
அறமுடன் சேவை வளர்த்து
வகையான வழிபாடு தன்னை
வடிவேலன் பால் தொடர்ந்து செய்து
7. செய்துமே சரவணச் சுடரேற்றி
செப்பிட முருகா அரங்கா என
மெய்ஞானம் வேண்டி செபதபம்
மக்களெல்லாம் செய்து வர
8. வருகவே உள்ளும் புறமுமாக
வடிவேலன் அருளை அறிந்து
தருமம் செய்ய உண்டான
தயவு நிலையும் பெருகி
9. பெருகியே கலியுகமக்களெல்லாம்
பேருலகை மாற்ற வல்ல
தருமபலம் கொண்ட மக்களாக
தவசியாக சிறந்து வாழ்வர்

10. வாழ்வினில் சன்மார்க்கம் எனும்
வல்லமையை வரமாகப் பெற்று
ஊழ்வென்று ஞானம் தேறி
உண்மை ஞானி அரங்கன் திருவடி

11. திருவடி பணியவே மக்களுக்கு
திருவருள் துணையாக வந்து
குருவரங்கன் மூலம் உலகமாற்றம்
குறையிலா உலகோர் செய்துமுடிப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–